சித்திரபானு ஞூ 4 2 3 சித்திரை மீ

1942-2

உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

(மாத வெளியீடு)




வாக்கிற்கு அருணகிரி

கருணைக்கு அருணகிரி

திருப்புகழமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர்.

G DARAN'S ENGRAVERS MADRAS

வருடசந்தா ரூ 1-8-0 தனிப்பிரதி அ-2-6

உ

முருகா

## பொருளடக்கம்.


திருப்புகழ்
உடலினூடு 161
ஸ்வரம்
உடலினூடு 166
கந்தரலங்காரம்
ஒருபூதரு 167
சிவாநந்தலஹரீ 169
கந்தர் திருவிளையாடல் 170
கற்பு 175
அமிர்த வாழ்த்துப்பா 183
மலச்சிக்கல் நீங்க 184


---

கந்தரநுபூதி உரை பின்னர் வெளிவரும்.

---


# வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

## பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.

## பட்டு-சேலை தினுசுகள்

## சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்


## எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,

## எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.

பட்டு ஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பி தெரு, சின்ன காஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.




ஸோல் ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

உ

ஓம் குஹாய நம:

4235

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 7. Vol 7. | சித்திரபானு ஸு கார்த்திகைமீ 1௨ நவம்பர் 1942 | இதழ். 8. No 8.

## திருப்புகழ்.

### திருத்தணிகை.

உடலி னூடு போய்மீளு முயிரி னூடு மாயாத
உணர்வி னூடு வானூடு முதுதீயூ
டுலவை யூடு நீரூடு புவியி னூடு வாதாடு
மோருவ ரோடு மேவாத தனிஞானச்
சுடரி னூடு நால்வேத முடியி னூடு மூடாடு
துரிய வாகு லாதீத சிவரூபம்
தொலைவி லாத பேராசை துரிச றுத வோர்பேதை
தொடு முபாய மேதோசோ லருள்வாயே
மடல றாத வாரீச அடவி சாடி மாறான
வரிவ ரால்கு வால்சாய அமராடி
மதகு தாவி மீதோடி யுழவ ரால டாதோடி
மடையை மோதி யாறூடு தடமாகக்
கடல்பு காம காமீனை முடுகி வாளை தான்மேவு
கமல வாவி மேல்வீழ மலர்வாவி
கடவுள் நீல மாறாத தணிகை காவ லாவீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

VII 24

## பதவுரை.

மடல் அருத - இதழ்கள் உதிராத, வாரீச - தாமரை, அடவி சாடி - காடுகளை முறித்து, மாறு ஆன வரி வரால் குவால்சாய - மாறுபட்ட வரிகளோடு கூடிய வரால் மீன்களின் கூட்டம் சாய்ந்து ஓடுமாறு, அமர் ஆடி - போராடி, மதகு தாவி மீது ஓடி - நீர் செல்லும் வழியைத் தாவி அதன் வழியே ஓடிச் சென்று, உழவரால் அடாது ஓடி - பயிர் செய்யும் மள்ளரால் கொல்லப் படாமல் சென்று, மடையை மோதி - வயல் மடைகளை இடித்து, ஆறு ஊடு தடம் ஆக - ஆற்றின் நடுவில் அதனை வழியாகப் போய், கடல் புகா மகா மீனை - சமுத்திரத்தில் புகுகின்ற பெரிய மீனை, முடுகி வாளை தான் மேவு - எதிர்த்து வாளை மீன்தான் வாழ்கின்ற, கமலவாவி மேல் வீழும் - தாமரைத் தடாகத்தின் மேல்விழும்; (இத்தகைய வளமுடையதும்) வாவி - சுனையில், கடவுள் நீல மலர்மாருத - தெய்வத்தன்மை பொருந்திய நீலோற் பல மலர் நாடோறுந் தவருது மலரும், தணிகை காவலா - திருத் தணிகை மலைக்குக் காவலாக வாழும், வீர - வீரரே! கருணை மேருவே - கருணையில் மேருமலை போல உயர்நதவரே! தேவர் பெருமாளே - தேவர்கட்குத் தலைவராக விளங்கும் பெருமையின் மிக்கவரே! உடலின் ஊடு போய் மீளும் - உடம்பினுக்குள் புகுந்து மீண்டும் வெளிப்படும், உயிரினூடும் - பிராணவாயுவி னுடனும், மாயாத உணர்வினூடும் - கெடாத அறிவினுடனும், வானூடும் - ஆகாயத்தினுடனும, முது தீயூடு - மிகவும் வெமமை யோடு கூடிய நெருப்பினுடனும், உலவை யூடு - காற்றினுடனும், நீரூடு - தண்ணீருடனும், புவியினூடு - மண்ணுடனும், வாது ஆடும் ஒருவரோடும் - வாது செய்கின்ற ஒருவருடனும், மேவாத - கலக்காத, தனி ஞான சுடரினூடு - ஒப்பற்ற சிவஞானப் பேரொளியினுடனும், நால்வேத முடியினூடு - நான்கு வேதங் களின் உச்சியினுடனும, ஊடாடு - கலந்திருக்கின்றதும், துரிய வாகு உலா ஆதித - துரிய நிலையின் மீது அழகுடன் உலாவிக் கடந்ததும் ஆகிய, சிவ ரூபம் - சிவ வடிவான செம்பொருளை, தொலைவு இலாத - நீங்குதலிலாத, பெரு ஆசை துரிசு அருத - பெரிய ஆசையாகிய குற்றத்தினின்று விலகாத, ஓர் பேதை - ஒரு அறிவிலியாகிய அடியேன், தொடும் உபாயம் ஏதோ - அடை யும் வழி எதுவோ? சொல அருள்வாயே - சொல்லியருள் புரிவீர்.

## பொழிப்புரை.

இதழ் உதிராத தாமரைப் பூங்காடுகளை அழித்து மாறுபட்ட வரிகளுடன் கூடிய வரால் மீன்களின் கூட்டம் அழிய போராடியும், நீர் செல்லும் மதகுகளிற் றுவிச் சென்று மள்ளர்களால் தடுக்கப் படாமல் ஓடியும் மடையை உடைத்தும் நதிகளின் வழியே சென்று கடலில் புகும் பெரிய மீன்களை எதிர்த்தும் வாளை மீன்கள் தாமரைக் குளத்தில் வீழும். இத்தகைய வளமை மிக்கதும், தெய்வத்தன்மை பொருந்திய நீலோற்பல மலர் நாடோறுந் தவறாமல் மலர்கின்ற சுனையுடன் கூடியதுமாகிய திருத்தணிகை மலைக்குக் காவலாக வாழும் வீரரே! பெருமித முடையவரே! உடம்பினுள் சென்று மீளும் பிராணவாயுவுடனும், அழியாத அறிவினுடனும், வான், காற்று, தீ, புனல், மண் என்னும் ஐம்பெரும் பூதங்களுடனும், வாது செய்கின்ற வேறு எவருடனும் கலவாததும், ஒப்பற்ற சிவஞானப் பேரொளியி னுடனும் நான்கு வேதங்களின் சிகரத்தின்மீதும், துரியாதீதத்திலும் கலந்துள்ள சிவமென்னும் செம்பொருளுடன், தொலையாத பேராசை யென்னுங் குற்றத்திலின்றும் நீங்காத அறிவற்ற அடியேன் கலந்து இன்புறும் எளிய வழி யாதோ அதனை அடியேனுக்கு உபதேசித் தருள்வீர்.

## விரிவுரை.

**உடலினூடு போய்மீளும் உயிர்:—**

பிராண வாயுவானது உடம்பினுட் செல்வதும் மீள்வதுமாகத் தொழிற் படுகின்றது. அது, 8 அங்குலம் உட்சென்று, 12 அங்குலம் வெளிப்படுகின்றது. 4 அங்குலம் கழிகின்றது. நாளொன்றுக்கு 21600 பிராணன் வெளிப்படுகின்றது. ஒவ்வொரு முறையும் 4 அங்குலங்கழிந்து கொண்டேவரின் ஆயுள்முடிவடைகின்றது.

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கைய
ரோடுவர் மூஞவர் பன்னிரண் டங்குலம்
நீடுவ ரெண்விரற் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல வஞ்செழுத்தாமே.
—திருமந்திரம்.

வாசி — சுவாசம். இதில் "வா" என்னும் ஒரு நெடிலும், "சி" என்னும் ஒரு குறிலுமுளது. வாசிக்குப் 12 அங்குலம் ஏற்பட்டால், "வா" என்பதற் 8 அங்குலமும், "சி" என்பதற்கு 4 அங்குலமாம். 12 அங்குல அளவுள்ள வாசி வெளியிற் போனால் திரும்பி வருவது (8 அங்குலமுள்ள) "வா" மாத்திரமே (4 அங்குலமுள்ள)சி பிரிந்து நிற்கின்றது. அவ்வாறு பிரியாவிடின் "சிவா" எனத்திரும்பும். இச்சாதனையிற் சித்திபெற்றவர்கள் தான் "சிவ" "சிவ" என்று சொல்லத் தெரிந்தவர்கள் இவர்கள்தான் பிறப்பையும் இறப்பையும் நீக்க வல்லவர்கள். இவ்வுண்மையையே திருமூலர் தமது திருமந்திரத்தில் விளக்குகின்றனர்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

"சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் ளடங்க"

மேலும் "சி" என்னும் எழுத்தைப் பிரியவிடாது சாதனை செய்யில் சிவப்ரகாசம் விளங்கி முத்தி யடைவது திண்ணம்.

"ஓ யெழுத் தொன்றைச் சிந்தையிற் கருதத்
தூயநற் சுடராய்த் தோன்றுவை யென்றான்"

அங்கமு மாகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையும் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கல மாமே.

என்னும் திருமந்திரங்களால் விளங்குகின்றது. இனி விட்ட எழுத்தாகிய "சி" காரத்தை, விடாத எழுத்தாகிய

"வா" வோடு கட்டவல்லார்களே உயிரைக் காக்க வல்லார் களாவர்.

"விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்ட வல்லார் உயிர் காக்க வல்லாரே"
— திருமந்திரம்.

இதனைத் தொடுவதே சிவரூபம் தொடுமுபாயம் ஆம். இப்பாடலில் "தொடுமுபாயம் ஏதோசொல்" என்ற 8-வது வரிக்கு மேற்போந்த நுண்ணிய கருத்துக்களையே விடையாக வுணர்ந்து அநுபவத்திற்குக் கொணர வேண்டும்.

தொலைவில்லாத பேராசை துரிசு:—

ஆசை யறுவதே ஆண்டவனை யடையும் வழியாம்.

"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்"
—திருமந்திரம்.

"பேராசையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ"
—அநுபூதி.

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையார்
அற்றாக வற்ற திலர்.
—திருக்குறள்.

மடலறாத............மாறாததணிகை:—

இந்த நான்கு அடிகளிலும் தணிகையின் நீர்வளமும், வாளை மீன்கள் வரால் மீன்களைத் தாக்கும் பெருமிதமும் மிகவும் நன்றாக படிக்குந்தோறும் இன்பம் பயக்குமாறு கூறப்பட்டுளது.

## கருத்துரை.

தணிகை மலைமேல் வாழுங் கருணைக்கடவுளே! ஆசை யற்று அடியேன் சிவரூபத்தைப் பெற்றுய்யுமாறு உபதேசித் தருள்வீர்.

## திருப்புகழ் ஸ்வரம்.

**இராகம்: மத்யமாவதி.** **தாளம்: பத்தி.**

(ரூபக சதுரஸ்ரம்)

| | | | |
|---|---|---|---|
| ,, ரிம | பா பமரீ ஸா | ஸ நி பா | ,, நிஸ ரீ ரீ |
| உட | லி னா . . டு | போய் . . | மீ . . ளும் |
| ,, ரிம | பா பா ,, பா | ப ம ப நி | பமரீ ரி ம ரி ஸ |
| உயி | ரி னா டு | மா . . . | . . யா . . த . |
| ,, நிஸ | ரீ மா ,, மரி | ரி மப நி | பமரிம ரீஸா |
| உணர் | வி னா டு | வா . . | . . னா . டு |
| ,, ரி ம | பா ,, ,, பநி | பா ,, | , , , , |
| முது | தீ .. .. . . | யூ | |
| ,, மப | நீ பா ,, மா | பா நீ | நீ நீ ஸ்ா , , |
| டுல | வை யூ டு | நீ . | . . . டு |
| ,, நிஸ் | ரீ ரீ ,, ரீ | ஸ் ரி ம்ா | ரீ ரீ ஸ்ா ,, |
| புவி | யி னா டு | வா . . | . தா டும் |
| ,, நிஸ் | ரீ ஸ்ா ,, நீ | ஸ்நிஸ்நி | பா பம ரிமரிஸ |
| ஒரு | வ ரோ டு | மே . . | . வா த |
| ,, ரி ம | பா ,, , , , , | ப ம ப நி | பாமரீ , , , , |
| தனி | ஞா .. . . . . | . . . . . | . . . |
| ,, ரிம | பம ரிம ரிரிஸநி | ஸ்ா , , | , , , , , , , , |
| . . . | . . . . . . . | ன . . | |

## சுகபேதிச் சூரணம்

பசும்பாலில் வேகவைத்து எடுத்த சிவதை வேர் 2 பலத்தை இடித்துச் சூரணித்து, 2 பலம் சர்க்கரை போட்டு சீசாவில் வைத்துக் கொண்டு, திரிகடிகை யளவு தாளெடுத்து வெந்நீரில் போட்டருந்த சுகமாய் பேதி யாகும். ஆயாசம் இராது.

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(145 ம் பக்கத் தொடர்ச்சி)

(45) ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றனிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே.

## பதவுரை.

இரு கோடு — இரண்டு கொம்புகளையும், ஒருகை — ஒரு துதிக் கையையும் உடைய, பொருபூதரம் உரித்து - போர் செய்யும் மலையை (யானையை) உரித்து, ஏகாசம் இட்ட - உத்தரீயமாகப் போட்டுக் கொண்ட, புராந்தகற்கு — திரிபுர தகனராகிய சிவ பெருமானுக்கு, குரு - ஆசாரியரும், பூதவேலவன் - பரிசுத்த மாகிய வேற்படையை யுடையவரும், நிட்டூர சூரகுல அந்த கனே — நிட்டூரத்தைச் செய்யும் சூரபன்மனுடைய குலத்தை யழித்தவரும் ஆகிய முருகக் கடவுள், பூத வீட்டில் இராமல் - பஞ்ச பூதங்களாலாகிய இந்த உடம்பாகிய வீட்டில் வசிக்காமல், ஒரு பூதரும் அறியா - பூதஉடம்பை யுடைய ஒருவரும் அறிய வொண்ணாத, தனிவீட்டில் - ஒப்பற்ற வீட்டின்கண், உரை உணர்வு அற்று - சொல்லும் நினைவும் அற்று, இரு என்றான் - சலிப்பின்றி இருப்பாயாக என்றான்.

## விரிவுரை.

ஒருபூதரு மறியாத் தனிவீடு:—

பூதர் - பஞ்சபூத சம்பந்த முடையவர். தனிவீடு - மௌனபஞ்சரம். அதில் "உரையும் உணர்வும் அற்று இரு" என்று முருகப் பெருமான் அருணகிரிநாத சுவாமி கட்கு உபதேசித் தருளினார். "சும்மா இரு சொல்லற" என்பது இறைவன் உபதேச அருள்மொழி. "இராப்பக

லற்ற இடம்" "எனையாண்ட இடம்" என்ற திருவாக்குக ளெல்லாம் இது குறித்து எழுந்தனவே.

வேதாகமசித்ர வேலாயுதன் வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மாயிருக்க
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே.

என்ற கந்தரலங்காரத் திருப்பாடலையும் இத்துடன் பொருத்தி சற்று ஆழமாக சிந்தித்துணர்க.

ஒரு பூதர் - என்பதற்கு ஒப்பற்ற பரிசுத்தர்கள் என்றும் பொருள்படும்.

பூதவீடு:—

பஞ்ச பூதத்தாலாகிய உடம்பு.

இருகோட்டொருகை பொருபூதரம்:—

பூதரம் - மலை. உவம ஆகுபெயராக யானையை உணர்த்துகின்றது.

ஏகாசம்:—

ஏகாசம் - மேற்போர்வை. சிவபெருமான் யானையை உரித்து போர்வையாகப் போர்த்துக் கொண்டனர்.

முருகக்கடவுள் அருணகிரிநாதருக்கு குருவடிவாக முன்தோன்றி உபதேசித் தருளினர். சிவபெருமானுக்கும் குருவாக இருந்த குகப்பெருமான் தனக்குங் குருவாக வந்து உபதேசித்தனர் என்று கூறும் அருமைப்பாடு உன்னுந்தொறும் உள்ளம் உருகுகின்றது.

"உரையுணர்வு அற்றுஇரு" என்றதற்கு இணங்கசீர் பாத வகுப்பிலும் கூறுமாறு காண்க.

"உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ
உளபடியை யுணருமவ ரநுபூதி யானதுவும்"

## கருத்துரை.

சிவகுருவாகிய செவ்வேட்பரமன், இப்பூத வீட்டில் இராமல் மௌனவளாகத்தில் சும்மா இரு என்று உபதேசித்தருளினர்.

ஓம் குஹாய நம:

# சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(146-வது பக்கத் தொடர்ச்சி)

(92) தூரீக்ருதாநி துரிதாநி துரக்ஷராணி
தௌர்பாக்ய து:க துரஹம்க்ருதி துர்வசாம்ஸி!
ஸாரம் த்வதீய சரிதம் நிதராம் பிபந்தம்
கௌரீச மாமிஹ ஸமுத்தர ஸத்கடாக்ஷை:||

## பதவுரை.

| | |
|---|---|
| கௌரீச | — உமாதேவியின் கொழுநரே! |
| துரக்ஷராணி | — அயனெழுதிய கெட்ட எழுத்துக்களை அறிவிக்கிறதாயும், |
| துரிதாநி | — பாவத்தா லடையப்பட்டதாயு மிருக்கின்ற |
| தௌர்பாக்ய து:க துரஹம்க்ருதி துர்வசாம்ஸி | — துரதிஷ்டம், வருத்தம், மமதை, கெட்டசொற்கள் ஆகிய இவைகள், |
| ஸத்கடாக்ஷை: | — சிறந்த உமது கடைக்கண் பார்வைகளால் |
| தூரீக்ருதாநி | — போக்கடிக்கப் பட்டவைகள் |
| ஸாரம் | — ரஸமயமான |
| த்வதீய சரிதம் | — உமது சரித்திரத்தை |
| நிதராம் | — மிகவும் |
| பிபந்தம் | — பருகுகின்றவனை |
| மாம் | — அடியேனை |
| இஹ | — இப்பிறப்பிலேயே |
| ஸமுத்தர | — கரையேற்றியருளும். |

## பொழிப்புரை.

ஓ உமாகாந்தரே! அடியேனுடைய தீய எழுத்துக்களை யறிவிக்கின்றதாயும், பாவங்களும் துரதிர்ஷ்டங்களும், அகங்காரமும், துர்வாக்குகளும் உமது கடைக்கண் பார்வையால் நீங்கிபிற தேவர் சரித்திரங்களைக் காட்டிலும் மதுரமான உமது சரித்திரமாகிய அமிர்தத்தை எப்போதும் பருகுகின்ற அடியேனை இப்பிறப்பிலேயே கடேற்றி யருள்வீர்.

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

## "சென்னிமலைச் சிறப்பு"

(153-ம் பக்கத் தொடர்ச்சி)

கோயிலுள் சுவாமி மீது அழுக்கு நிறைந்த கந்தல் துணி ஒன்று சுற்றப்பட்டிருந்தது. சில பச்சிலைகள் இருந்தன. வில்வக் கட்டையால் அரைத்த சந்தனப் பொட்டு இருந்தது. முன்னிருந்த நவரத்தின மணிமகுடமும், தங்க அங்கியும், பொன்னாபரணங்களும் பத்தி மாலைகளும் காணப்படவில்லை. அரசன் கண்களை ஒருவிசை துடைத்துப் பார்த்தான். குருக்கள் ஒரு குடந் தண்ணீரால் சுவாமிக்கு திருமஞ்சனமாட்டி வில்வக் கட்டைச் சந்தனத்தைப் பொட்டாக வைத்து, நாலு ஐந்து பத்திர புஷ்பத்தைச் சாத்தி, நிவேதனஞ் செய்து சூடத்தைக் கொளுத்தி ஆராதனை செய்து மன்னனுக்குத் திருநீற்றுப் பிரசாதம் வழங்கினார். மன்னன் இந்த பெரிய மாறுதலையைக் கண்டு, முன்னே வந்து நவரத்தினக் கோயிலுடன் காட்சி தந்து பூசித்து திருநீறு தந்தவர் முருகவேளே என்றும், தான் அதுபோல் கோயிலைப் புதுக்குமாறு ஆண்டவர் குறிப்பிட்டிருக்கின்றாரென்றும், எண்ணி, "தேவதேவா! மூவர் முதல்வா! வேலாயுதா! காலாயுதத்தைக் கையிலேந்திய கற்பகமே! என்னே நின் கருணை? ஏழையேனை யாட்கொள்ளும் பொருட்டு தேவரீரே அர்ச்சகராக எழுந்தருளி வந்து ஆட்கொண்டீரே! ஞானபண்டிதா! கருணைக்

கடலே!" என்று துதித்து குருக்களைத் தொழுது, "சுவாமி! சற்று முன் இந்த இறைவனே எனக்கு அர்ச்சகராக வந்து நவரத்தினக் கோயிலாகக் காட்சி தந்து பூசித்துப் பிரசாதமும் தந்து, தனக்குப் பின் பூசிப்பதற்கு, உரிய பிள்ளை திருக்கடவூரிலே மூத்த தாரத்தின் மகன் தெய்வ சிகாமணி என்பவரே என்றும், அவரை அழைத்து வருமாறும் கட்டளை யிட்டனர்" என்றும் கூறினான். குருக்கள் குமாரக் கடவுள் செய்த திருவிளையாடலைக் கேட்டு அதி யற்புதமுற்று, "மன்னரேறே! நின் பாக்கியமே பாக்கியம். முன்னியவை முடிக்கும் சென்னியப்பரே வந்து ஆட் கொண்டனர். எனக்கும் சந்ததியில்லை. எனக்குப் பிறகு எம்பெருமானை பக்தியுடன் பரவி வழிபாடு செய்தற்கு நல்லிலக்கணம் அமைந்த நற்றவப் புதல்வன் எங்கே கிடைப்பான் என்று மனங் கவன்றுகொண் டிருந்தேன். எந்தை கந்தவேளே ஆய்ந்து தன்னை வழிபடற்குரியான் ஒருவனை அழைதது வருமாறு கட்டளை யிட்டாரென்றால் இதனினும் சிறந்த பேறு யாதுளது? இனி தாமதியாமல் நீரே சென்று திருக்கடவூரில் அப்புதல்வனை எல்லா விதமான சிறப்புக்களுடன் இனிது அழைத்து வாரும், தாங்கள் முன் கண்ட வண்ணம்போல் ஆலயத்தையும் புதுப்பித்து திருப்பணி செய்து செவ்வேளை எவ்வேளையும் தொழுது இம்மை மறுமை நலன்களை எளிதிற் பெற்றுப் பொன்றாப் புகழையும் சென்னியப்பன் திருவருளையும் பெற்று உய்வுபெறுவீர்" என்றார். உடனே மன்னர் பெருமான் மதிமந்திரியர் முதலியோர் புடைசூழத் திருக்கடவூரை நாடிப் புறப்பட்டனர்.

திருக்கடவூர் என்னுந் திருத்தலம் சோழநாட்டுப் பழம்பதிகளுக்கெல்லாம் பழம்பதி; 3 பிரமதேவனைக் கண்ட மார்க்கண்டேயர் வழிபட்டு மறலியை வென்று மன்னுபுகழ் பெற்ற அரிய தலம் அதுவே என்றால் அத் தலத்தின் பெருமையை அளக்க வல்லார் யாவர்?

"கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ் சாத்திச்
சிறுவனுக் காயு ளீந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழன மூதூர்" —திருவிளை-அருச்சனை- உஉ.

அமிர்தகடேசப் பெருமான் அபிராமி அம்பிகையுடன் எழுந்தருளிய அற்புத க்ஷேத்திரம். குங்கிலியக் கலய நாயனார் திருவவதாரஞ் செய்த திருப்பதி. இத்தகைய பெருமை வாய்ந்த திவ்விய க்ஷேத்திரத்தில் சுவாமியை அன்புடன் வழிபடும் அர்ச்சகர் மிகுந்த சாந்த சீலர்; பூதி சாதன முடைய ஆதி சைவ மரபுக்கே ஒரு அணிகலன் போன்றவர். அவர் பெயர் அமுதகலயர். முக்கட்பெருமானை முப்போதுந் திருமேனி தீண்டி பூசை செய்வார். அன்பு நிறைந்த அறிவாகரர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி கருத்தில் கறைமிடற்றண்ணலை யிருத்தி அகத்தே எப்போதும் பூசிக்கும் இயல்புடையார். அவருடைய தரும பத்தினியார் திருவுதரத்தில் ஓராண்மகவு பிறந்தது. அப்பிள்ளைக்கு தெய்வசிகாமணி என்று பேரிட்டுச் சீரிட்டனர். அம் மகவு பிறந்த சில திங்களுக்குப்பின் அம் மாதரசி மண்ணுலக வாழ்வை நீத்து கண்ணுதற் கடவுளின் செம்மலர் நோன்றாட் கமலங்களில் கலந்தனர். அமுதகலயர் சிறு மகவை வளர்க்கும் திறனறியாது விழித்தனர். குலத்தாலும் பிற நலத்தாலும் ஒத்த ஒரு கன்னிகையை மறுமணம் புரிந்துகொண்டனர். இளைய மனைவியுடன் இன்புற்று வாழ்ந்து இறை வழிபாட்டைச் செய்துகொண்டு தெய்வசிகாமணியை வளர்த்து வந்தனர். சில ஆண்டுகட்குப்பின் இளையாள் கருக்கொண்டு உரிய காலத்தில் அரிய ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தனள். தெய்வசிகாமணி பிறைமதிபோல் வளர்ந்து மறைகள் நான்கையும் அங்கங்கள் ஆறையும் சிவாகமங்களையும் ஓதி யுணர்ந்தனர். அடக்கமும் பொறையும் ஆன்ற நல்லறிவும் அருளு நன்குடையராய்த் திகழ்ந்தார். சமய விசேட நிர்வாண தீக்கையும் ஆச்சாரிய அபிடேகமும் பெற்று சிவபூஜா துரந்தர

4235

ராய் விளங்கினர். சிறு விநாயகர், சிவலிங்கம், அறுபத்து மூன்று நாயன்மார்கள் இத்திருவுருவங்களை எழுந்தருளச் செய்து ஆன்மார்த்தமாக நாள்தோறும் வழிபட்டபிறகே உணவுகொள்ளும் நியதியை உறுதியுடன் மேற்கொண்டிருந்தார். இளையாள் மகனும் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினன்.

திருக்கடவூரில் அமிர்தகடேசுவர சுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அதில் அமிர்தகலய குருக்கள் தமது மூத்த மகனுக்கு இரக்ஷாபந்தனங் கட்ட நிச்சயித்திருந்தார். ஆனால், இளையாள் தன் மகனுக்கே ரக்ஷாபந்தனம் செய்ய வேண்டுமென்று கணவனை வற்புறுத்தினள். அவர் மூத்தவனிருக்க இளையவனுக்கு எவ்வாறு செய்வதென்று மிகுந்த கவலையுறுவா ராயினர். இளையாள் சொல்லைத் தட்டும் ஆற்றலும் அவருக்கு இல்லை. நியாய விரோதமாக நடப்பதற்கும் உள்ளம் ஒருப்படவில்லை. என்செய்வார் பாவம்! ஏங்கினர். "சிவபெருமானே! செல்வமே! செம்மேனி எம்மானே! மூத்தாள் மகனே மூத்தவன். அறிவிலும் மூத்தவன். பள்ளத்தை தண்ணீர் தானே தேடிவந்து தங்குவதுபோல் எல்லா நற்குணங்களும் தானே அவனைத் தேடிவந்து தங்கியிருக்கின்றன. அவனை யொழித்து இளையாள் மகனுக்கு எவ்வாறு ரக்ஷாபந்தனம் செய்வேன்? ஆனால் இளையாளோ மிகவும் தொந்தரை செய்கின்றாள். இளையவனுக்குச் செய்தால் மூத்தவன் மிகவும் மனவருத்தப் படுவானே? இந்தத் தருமசங்கடத்திற்கு நான் என செய்வேன்?" என்று வருந்திக்கொண் டிருந்தார்.

ரக்ஷாபந்தனம் செய்யவேண்டிய நாளைக்கு முன்னாள் தெய்வசிகாமணி என்பவர் இளைய தாயாருடைய கருத்தையும், பிதா அதற்கு இணங்குவதற்கு வருந்துவதையும் தெரிந்து, "தெய்வமே! ஞான பண்டிதா! என்னால்தானே என்பிதாவுக்குக் கவலை. நான் இறந்தோ - அல்லது வெளி

யேறியோ போய்விட்டால் பிதாவுக்கும் கவலையிராது. இளைய தாயின் இஷ்டமும் இனிது நிறைவேறும். இவ்வொருவனால் தாய்தந்தையர்க்குக் கவலை விளையலாமா முருகா! இதற்குத் தீர்வு தேவரீரே தேடவேண்டும்" என்று உள்ளம் உருகி கண் கலுழ்ந்துகொண்டிருந்தார். அதே சமயத்தில் சோழமன்னன் பரிவாரங்களுடன் வந்து, தெய்வசிகாமணியையும், அவருடைய பிதாவையுந் தொழுது, சென்னிமலை யாண்டவன் தனக்குப் புரிந்த திருவிளையாடலையும் திருவருளையுங் கூறி, ஆண்டவனுடைய கட்டளையையும் எடுத்துச் சொல்லி "சென்னிமலைக்கு வந்து வழிபாட்டின் உரிமையை ஏற்றுக் கொண்டு எம்மை உய்வித்தருள்வீர்" என்று வேண்டினன். பிதாவும் இறைவன் திருவருளை எண்ணி வியப்புற்று, அங்கு நிகழ இருக்கும் ரக்ஷாபந்தன வழக்குக்கும் ஒரு பரிகாரம் ஏற்பட்டதாக நினைந்து, தனது முதன் மகனாகிய தெய்வசிகாமணியை அரசனுடன் அனுப்பினார். தெய்வசிகாமணி பிதாவை வலம் வந்து வணங்கியும் சிற்றன்னையையும் அவ்வாறே பணிந்தும் இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு, பொதிமாட்டுகளின் மீது விநாயகர், சிவலிங்கம், அறுபத்துமூவர் என்கின்ற ஆத்மார்த்த மூர்த்திகளடங்கிய பூசைப் பெட்டிகளை ஏற்றி, அரசனுடன் புறப்பட்டார். பூசைக்குரிய காலங்களில் வழியில் ஆங்காங்கு தங்கி பூசையை இடையூறின்றி செய்து கொண்டு சில தினங்களுக்குப் பின் சென்னிமலைக்கு அருகில் உள்ள காளிமாநகரத்தில் தங்கினார்கள்.

மறுநாள் தெய்வசிகாமணி சென்னிமலைமீது ஏறி வடிவேலிறைவனை வணங்கி, "கார்த்திகேயா! காங்கேயா! சரவணபவா! சண்முகா! குமரா! குன்றெறிந்த குமரா! என்னையும் ஒரு பொருளென்று மதித்து தேவரீரை வழிபடற்கு உரியவனாக வரவழைத்தீரே! என்னே நின் கருணை! ஏகநாயகா! லோகநாயகா! அடியேனை என்றும்

ஓம் குஹாய நம:

# கற்பு.

வாகதேவன்:— பெண்ணே! நீயோ சிறந்த அழகும் அறிவும் உடையவள். நல்ல செல்வத்திற் பிறந்து செல்வத்தில் தவழ்ந்து செல்வத்தில் வளர்ந்தவள். நானோ பரமஏழை. நீ என்னை மணந்து துன்புறுகின்றனை. உலகில் கொடியவற்றுள் எல்லாங் கொடிது வறுமை ஒன்றே. "கொடிது கொடிது வறுமை கொடிது" என்பது அநுபவவுரை யல்லவா? நான் எவ்வளவோ பாடுபட்டும் வயிறு நிரம்ப வழியில்லை. "வறுமையாகிய தீயின்மேற் கிடந்து நெளியும் நீள்புழுவாயினேற்கு இரங்கி யருள்வாயே" என்ற அருணகிரிநாதருடைய வாக்கு நம்விஷயத்தில் மிகவும் பொருத்தமே.

---

மாறாத கருணையுடன் ஆண்டருள்வீர். இனியொரு கருப்புகாவண்ணம் காத்தருள்வீர்.

வன்னிமா னேந்துமெந்தை மகிழ்தரு மைந்த ஏனற்
கன்னிமான் மகிண வேற்கைக் கடவுணாயகனே யாடும்
உன்னியைச் செலுத்து ஞான உதய மார்த்தாண்ட வோங்குஞ்
சென்னிமா மலைமேல் மேவு தேவநின் திருத்தாள் போற்றி.

தரகிரி பகவே லேவுந் தலைவனே கலைவ லோர்வாழ்
பரகிரி யமர்ந்த செவ்வேட் பரமனே பழநி வாழ்வே
வரகிரி பலவு நாண வளமிகு கொங்கில் மேவு
சிரகிரி வாழுந்தேவ் தேவநின் திருத்தாள்போற்றி.

அருவரை யெடுத்தவீர னடல்கெடுத் தருளிச் செம்பொன்
ஒருவரை யெடுத்தழுக்க ஒருவரை மகிழச் செய்வோய்
இருவரை தகர்த்தன் போவா இருவரை வேட்டுச் சென்னித்
திருவரை மேவுந் தேவ தேவநின் திருத்தாள் போற்றி.

என்று வாயார வாழ்த்தித் தலையாரக் கும்பிட்டு நெஞ்சார நினைத்து வழிபட்டுத் திரும்பினர். (தொடரும்)

இன்மை யென ஒருபாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் என்ற

பொய்யாமொழி பொய்யாமொழியே. நாம் சுகப்படுங்காலம் என்றோ? (ஒரு பெருமூச்சு விட்டான்)

வனஜாட்சி:— பிராணேசா! தங்களைப்போன்ற உறுதியுடையவர்கள் தளரலாமோ? மகிழ்ச்சி என்றவொன்று செல்வத்தினுல் வராது. "சிறியரே மதிக்குமிந்த செல்வம்" என்பது ஆன்றோர் அமுதவாக்கன்றோ? தங்கள் திருவடி இரண்டும் எனக்கு இரண்டு கோடியாகும். அறிவுதான் சிறந்த செல்வம். தங்களிடம் உள்ள அறிவைத்தான் நான் விரும்புகின்றேன்.

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

என்பது பொதுமறை. உடம்பெல்லாங் கிறிப்பார்க்கினும் சிறிதுகூட அறிவு இல்லாத அசட்டுப் பிண்டங்களாகிய தனவந்தருடன் வாழும் வாழ்க்கையினும் நரக வாழ்க்கையே நல்லது. தாங்கள் உளந்தளர வேண்டாம்.

வாசு:— பெண்ணரசே! கல்வியறிவுடைய மனைவியுடன் பேசும் இன்பத்தைவிட சிறந்த இன்பம் இல்லை யென்பதை இப்போது உணர்ந்தேன். ஆயினும் உன்னை சௌக்யமாக வைப்பதற்கு இல்லாத என் பாவத்தை நினைக்கும்போது என் உறுதியானது சேற்றில் நட்ட தூண்போல் ஆடிவிடுகின்றது. முற்பிறப்பில் நல்ல தவமும் தானமும் செய்தவர்கள் தானே இப்பிறப்பில் சீரும் சிறப்புமுற்று பெருவாழ்வு பெறுவர். மாதே! நாம் வேறு ஒரு ஊர்போய் சிறிது சுகமுறலா மென்று எண்ணுகின்றேன். உன் கருத்து யாது?

வன:— தங்கள் கருத்து எதுவோ அதுதான் என் கருத்து. கருத்தொருமித்து ஆதரவுபடுவது தானே காதலர்க்கு இன்பம், நாளையே புறப்படுவோம்.

வாசுதேவன் மனைவியின் கரத்தைப் பிடித்து கண்களில் ஒத்திக்கொண்டான்.

வாசுதேவன் நல்ல அறிவாளி; கட்டழகுடைய காளை; உண்மையான வீரன்; கருணைநீர் ஊற்றெடுக்கும் உள்ளமுடையவன். ராஜவம்சத்திற் பிறந்தவன். அவனுடைய பிதா பெரிய

தனவந்தர். ஏழைகளுக்குக் கொடுத்துக் கொடுத்து ஏழையாய் விட்டார். பிதாவும் மாதாவும் மண்ணுலகில் நமது வாசுதேவனைத் தனித்து விட்டு விண்ணுலகஞ் சென்றனர். வாசுதேவன் ஒரு தனி மனிதன் தான். அவன் பூர்வத்திற் செய்த புண்ணியத்தின் குவியல்போல் அவனுக்கு வனஜாட்சி மனைவியானாள். அதுதான் அவனுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம். வனஜாட்சி ஒரு பெருங் குடும்பத்திற் பிறந்தவள்; கற்புக்களஞ்சியம்; இன்சொல்லே அவளுடைய உயிர். அறிவற்றவனிடமுள்ள செல்வத்தையும் அவனையும் களைந்துவிட்ட நகத்தைப்போல் ஒதுக்கிவிடும் தன்மையுடையவள். அறிவுக்கே மதிப்பைத்தருவாள். அவள் நல்ல கல்வியறிவுடையவள். ஆதலால் கல்வியறிவுடைய வாசுதேவனை மணந்துகொண்டாள். அவர்கள் இருவருக்கும் திருமணம் நிகழ்ந்து ஆறு மாத காலமாயிற்று. வறுமையினால் தண்ணீரிலாத தடாகத்தின் தாமரைபோல் வாடினார்கள்.

மறுநாள் வாசுதேவனும் வனஜாட்சியும் தாங்கள் வாழ்ந்த கனகபுரியினின்றும் புறப்பட்டார்கள். வனஜாட்சியின் தாய் தந்தையர் தனவந்தர்கள். தங்கள் செல்வபுதல்வி வனஜாட்சியை ஒரு மூடசிகாமணிக்கு மணஞ்செய்துதர முயன்றார்கள். காரணம் பணம்தான். வனஜாட்சி அதை மறுத்து வாசுதேவனை மணந்து கொண்டாள். அதனால் தாய்தந்தையர் வனஜாட்சியை வெறுத்து பராமுகஞ் செய்தனர். ஆதலால் வனஜாட்சி தாய் தந்தையருடன் கூறுமலேயே தன் கணவனுடன் புறப்பட்டாள். மனம் ஒத்த அத்தம்பதிகள் ஒரு கானகத்தின் வழியே சென்று கொண்டிருந்தார்கள். வனஜாட்சி நடந்து வழக்கமில்லாதவள், எனினும் கணவன் சென்றவழியே, வானத்தில் பறக்கும் ஒரு பறவையை அதன்நிழல் தொடர்வதுபோல் கணவனைத் தொடர்ந்து சென்றனள்.

நல்ல கடுவெயில்; பறவைகளும் வெயிலுக்கு வெருவி மரங்களில் ஒதுங்கியிருக்கின்றன. அடர்ந்த காடு. பசியினாலும் தாகத்தாலும் வனஜாட்சி மயங்கி விழுந்து விட்டாள். நிலத்தில் மூர்ச்சித்து வீழ்ந்த மனைவியைக்கண்டு வாசுதேவன் மனம் பதைத்து அவளை எடுத்து ஒரு மரத்தின் நிழலில் படுக்க வைத்துவிட்டு தண்ணீரைத் தேடிக்கொண்டு, வள்ளலிடஞ் சென்ற புலவனுடைய வறுமை எப்படி விரைந்து ஓடுமோ அப்படி விரைந்து ஓடினான். எங்கெங்கு தேடியுந் தண்ணீர் கிடைக்கப்பெருது அலையலுற்

ருன். இங்கே மரத்தடியில் வனஜாட்சி தங்கவிக்ரகம்போல் உணர்வற்றுக்கிடந்தாள். தடித்த தேகமும், துடித்த மீசையும் மடித்த வாயும், கருத்த உருவமும், கறுத்த உள்ளமும் உடைய ஒரு வேடன் அங்கு தற்செயலாய் வந்தவன் மரத்தடியில் உணவும் உணர்வும் அற்றுக் கிடக்கும் பெண்ணமுதைக் கண்டான். பேதை உள்ளத்தில் காமக்கனல் மூண்டது. அழகிய பெண் மயிலை கொடிய நாய் விரும்புவது போலிருந்தது. அவ் வேடன் உடனே சிறு கோழிக்குஞ்சை கருடன் வௌவிக்கொண்டு போவதுபோல் அம்மடமயிலைத் தூக்கிக்கொண்டு தன்னிஷ்டம் போல் நடந்தான். நெடுந்தூரம்போய் ஒரு பாறைமேல் அவளைக் கிடத்தி தண்ணீர் கொணர்ந்து வாயில் விட்டு! முகத்திலும் தெளித்தான். களைப்பு நீங்கி வனஜாட்சி கண் விழித்தாள். பெரிய மீசையும், ஆயிரம் அமாவாசையைப் பிழிந்தாற் போன்ற வடிவமும் நாற்றம் வீசும் உடம்புமுடைய வேடன் அருகே யிருக்கக் கண்டாள். "கனவோ" என்று ஐயுற்ருள். நன்ருக சுற்று முற்றும் பார்த்தாள். புலியைக்கண்ட இளமான் கன்றுபோல் நடுநடுங்கிஞள். அச்சத்தால் கண்களை மூடிக்கொண்டாள்.

வேடன்:- குட்டி! ஏன் பயப்படுகிருய்? நான் உன்னை ஒண்ணும் பண்ணமாட்டேன். வா என்குகைக்கு நல்ல மாமிசங்களைப் பதம்பண்ணித் தருகின்றேன். நான் உனக்கு நல்ல ஆம்படையான். உன்னைக்கண்டது முதல் என்தலை சுற்றுகின்றது. நீ எனக்கு பெண்டாட்டியா யிரு.

வனஜாட்சி:- அண்ணு! உனக்கு கோடி வந்தனம். நான் என் கணவனுடன் இந்தக் காட்டிற்கு வந்தேன். களைத்து விழுந்து விட்டேன். என் கணவன் எங்கே? என்னை நீ விரும்புதல் தகாது. நான் உனது தங்கை.

வேடன்:- குட்டி! சும்மா கதை பண்ணுதே. இனி நான் உன்னை விடமாட்டேன். புலி வாயிலகப்பட்ட மாமிசத்தைத் திரும்ப எடுத்தாலும் எடுக்கலாம் என்னிடத்தில் அகப்பட்ட உன்னை இனி ஒருவரும் மீட்கமுடியாது. வா போவோம்.

வனஜாட்சி:- அண்ணு! இந்த துர்ப்புத்தியை விட்டுவிடு. சுடுகின்ற நெய்யை நாய் விரும்பலாமா? கற்பிற் சிறந்த என்னை நீ துன்புறுத்தாதே. கற்புடைய மாதர் வயிறெரியச் செய்பவர் வாழமாட்டார். வேண்டாம்.

வேடன் அம்மாதரசி கல்லுங் கரையக்கூறும் நன்மொழி யைக்கேளாமல் அவளைப்பிடித்து தழுவப் போனான். அதே சமயம் அவன்மீது ஒரு கூரிய கணைவந்து பாய்ந்து "ஐயோ" என்று அலறி வீழ்ந்து மாண்டான். கணை வந்தவழியே வனஜாட்சி பார்த்தாள். அங்கு ஒரு சிறந்த அரசன் வேட்டையாடிக் களைத்து தன் பரிஜனங்களைவிட்டு நீங்கி நீர் தேடி வந்தவன் வனஜாட்சியை வேடன் வற்புறுத்தலைக் கண்டு கணைவிட்டுக் கொன்றான். அம்மன்னன் வனஜாட்சியைக் கண்டு அருகில் வந்தான். அவனுக்கிருந்த தாகம் அருகி மோகம் பெருகிற்று. புதையல் கிடைத்த வறிஞனைப்போல் மகிழ்ந்தான். குதிரைவிட்டிறங்கி வனஜாட்சியை நெருங்கி, "மாதரசே! நீ யார்? இங்கு இவ்வேடனிடம் சிக்கிய காரணம் யாது? நீ ஊர்வசியா? ரதிதேவியா? திலோத்தமையா? உன் புண்ணியப் பலனாக நான் உன்னைக் காப்பாற்றினேன்" என்றான்.

வனஜாட்சி, "கருணைமிக்க புண்ணியரே! நான் ஒரு பரம ஏழை. என் கணவனுடன் இக்காட்டின் வழியாக வந்தேன். பசி தாகத்தால் களைத்து விழுந்து விட்டேன். என் கணவன் எங்குற்றாரோ? அறியேன். இவ்வேடன் என்னைக் கவர்ந்து வந்து துன்புறுத்தினான். சமய சஞ்சீவிபோல் வந்து என்னைக் காப்பாற்றினீர். உமக்குக் கோடி வந்தனம்" என்றாள். அரசன் "பெண்ணரசே! உன்னுடைய நற்காலம் நான் உன்னை விரும்பினேன். வா. இந்தக் குதிரையில் ஏறு. என்னுடன் கூடி ராஜபோகத்தை நீ அநுபவிக்கலாம்" என்றான். வனஜாட்சி நடுநடுங்கி, "ஐயா! நான் பிறனுடைய மனைவி; தங்கட்குத் தங்கை. நீர் எனக்குப் பெரும் உதவி செய்தீர். என்னை விரும்புவது முறைமையன்று. வேண்டாம். உமக்கு வந்தனம்" என்றாள். அரசன், "மாதே. இயமனிடத்திலகப்பட்ட உயிர் திரும்பினாலும் திரும்பும். என்னிடத்தில் அகப்பட்ட நீ இனி எனக்கு மனைவியாகாமல் தப்பிக்க முடியாது. கண்ணே! வா அரண்மனைக்கு" என்றான். வனஜாட்சி "ஐயா! என்மீது உமக்குக் காதல் உள்ளதுபோல் உமதுமேல் எனக்குங் காதல் உண்டு. ஆனால் பெண்கள் உடனே வெளிப்படுத்த மாட்டார்கள். இனி எனக்கு உம்மைவிடச் சிறந்த கணவன் இல்லை. ஆனால் எனக்கு உங்கள் பொன்னுடம்பின் இயற்கையழகைக் காண விருப்பமாக இருக்கின்றது. ஆதலால், ஆடையாபரணங்களை யெல்லாங் கழற்றி வைத்துவிட்டு, கோவணத்துடன் அதோ தெரிகின்ற குன்றுக்கருகிலுள்ள சுனையிற்

குளித்துவிட்டு வாரும். பிறகு நாமிருவரும் அரண்மனைக்குப் போவோம். தங்கள் நடையழகை நான் பார்க்க விரும்புவதால் நடந்தே செல்லலாம்" என்றாள். காமத்தால் கருத்தழிந்த அக் கசடன் அவளுடைய கருத்தறியாது, "அப்படியே" என்று தனது ஆடையாபரணம் முடி முதலியவைகளைக் கழற்றி வைத்து விட்டு கோவணாண்டியாக குன்றை நாடி நடந்தான். அவன் சிறிது தூரம் போய் செடிகளில் மறைந்தவுடன், வனஜாட்சி அவ்வரச னுடைய ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு மணிமகுடத் தையும் தலையில் சூடிக்கொண்டு, குதிரையின்மீது ஏறி காற் ருகப் பறந்து சென்ருள். அறிவற்ற அரசன் நெடுந்தூரம் நடந்து சென்று குன்றினிடம்போய் அங்கு சுனையைக் காணது அயர்ந்து, வேறு ஒரு குளத்தில் குளித்து. "நமது பாக்யமே பாக்யம். பூலோக ரமபையைப் போன்ற பொற்கொடி கிடைத்தாள். அவ ளுடன் வாழும் வாழ்வே வாழ்வு" என்று எண்ணி மிகுந்த சந்தோஷத்துடன் கற்பாறைக்கு வந்தான். அங்கு வனஜாட்சி யையும் தனது உடைகளையும், குதிரையையும் காணது திகைத் தான். அவள் தன்னை ஏமாற்றிவிட்டுப் போயினள் என்றுணர்ந் தும் கோவணாண்டியான தனது நிலையை நினைந்தும் வருந்திஞன். ஊர்போக நாணிஞன். புதையலை யிழந்த வறிஞனைப்போல் திகைத்து காடெல்லாந் தேடி அவளைக் காணது களைத்து ஒரு வாறு தன்னூர்போய் சேர்ந்தான்.

வனஜாட்சி குதிரையைத் தட்டி ஓட்டி பல மலைகளையும் கானகங்களையும் ஆறுகளையுங் கடந்து கலிங்கதேயத்துள்ள பூங்காவனத்துள் நுழைந்து, அப்பூம் பொழிலின் நடுவேயுள்ள தாமரைத் தடாகத்தில் தண்ணீர் பருகி, குதிரைக்குந் தண்ணீர் காட்டி மிகுந்த அயர்வுடன் குதிரையை மரத்தில் கட்டிவிட்டு குளக்கரையில் ஓர் ஆலமரத்தடியில் நீலமேக நெடியமால்போல் படுத்துறங்கிஞள். கலிங்கதேயத் தரசன் வயோதிகன். அவ னுக்கு ஆண்மகவில்லை கலாவதி என்ற ஒரே பெண் இருந்தனள். அவள் மங்கைப் பருவத்தை யடைந்திருந்தனள். நல்ல அழகும் அறிவும் அமைதியும் உடையவள். கலாவதி வழக்கம்போல் மாலைநேரத்தில் தோழிகளுடன் தனது பூங்காவனத்தை நண்ணி னள். அங்கு சற்றுநேரம் ஆடியும் பாடியும் உலாவிக்கொண்டு தாமரைத் தடாகத்தை யடைந்தாள். அங்கு அறிதுயில் கொள் ளும் அனந்த சயனரைப்போல் இனிது துயிலும் வனஜாட்சி

யைக் கண்டாள். ஆண் உருவத்துடன் இருப்பதால் ஆடவன் என்று எண்ணி மையல் கொண்டாள். மன்மதன் மலர்கணையால் நொந்தாள். ஆ! ஆ!! இத்தகைய பேரழகுடைய ஆண் சிங்கம் எந்தத்தேசத் தரசகுமாரனோ? விசாகனோ? இந்திரசூநுவோ? நம்முடைய நற்காலம் இக்கட்டழகனைக் காண நேர்ந்தது. இவரை நாம் விரும்புவதுபோல் அவர் நம்மை விரும்புவாரோ? விரும்பாரோ? 'ஏ கௌரீ! மலைவளர்காதலீ! இவ்வீர புருடன் எனக்கு மணவாளனாக வேண்டும்' என்று பிரார்த்தித்தாள். அவ் வால விருட்சத்தினடியி லமர்ந்து வீணையைமீட்டி,

(பல்லவி) மையல்மீறி வருகின்றதே - மதன வதன இதமாக
மையல்மீறி வருகின்றதே

(அநுபல்லவி) தையலா மேன்னுடன்வாது ததிநீ செயத்தகாது
உய்யவே இவ்வையமீது உகந்தணைவாயிப்போது (மை)

என்ற ஓர் அழகிய பதத்தை நாடகுறிஞ்சி இராகத்திலே இனிது பாடினள். அப்பாடலைக்கேட்ட வனஜாட்(சி)சன் எழுந்தான், பாடுகின்ற பாவையைக் கண்டான் தானும்பாவை யாதலால் ஒன்றும் மனம் விகாரப் படவில்லை. ஆனால் கலாவதி தலை குனிந்து நின்றாள். ஒருவரை யொருவர் கண்டு களித்தனர். முடிவில் வனஜாட்சன், "மாதரசே! நீயார்? நின் பெயர் யாது" என்றான். "மன்னரரசே! நான் இந்தக் கலிங்கதேயத்தரசன் மகள்; என்பெயர் கலாவதி; தாங்கள் என்னை..................." என்று நிறுத்தினள். வனஜாட்சன் புன்முறுவல்கொண்டு "ம்... வலியவரும் ராஜலக்ஷ்மியை மறுப்பவர் யார்? உன் பிதா இசைய வேண்டுமே?" கலாவதி, "நானிசைந்தால் அவர் இசைந்தாப் போல்தான். வாருங்கள் அரண்மனைக்கு" என்று வனஜாட்சனை அரண்மனைக்கு அழைத்தேகினள். பிதாவுடன் தன் கருத்தை வெளியிட்டாள். கலிங்கர் கோவும் வனஜாட்சனைக் கண்டு களித்து, நல்ல ஒரு சுபதினத்தில் வனஜாட்சனுக்கும் கலாவதிக் கும் திருமணம் நிகழ்த்திவைத்தார். ஆனால் வனஜாட்சன்மட்டும் மிகவும் சாமார்த்தியமாக தன்னை ஒருவரும் பெண்ணென்று கண்டு கொள்ளாவண்ணம் தனியறையில் குளிப்பதும உடுப்பது மாக இருந்துவந்தான். ஒரு திங்கள் கழிந்தது வனஜாட்சனுக்கு மகுடாபிஷேகமும் ஆயிற்று. கலாவதியின் தந்தை தபோவனம் சேர்ந்தான். வனஜாட்சன் பேரரசன் ஆனன். நாள்தோறும் மனைவியுடன் மாலையில் நந்தவனத்தில் உலாவுவான். அவளை

சித்திரக் கதைகளைச் சொல்லி மகிழ்விப்பான். ஆனால் அவன் படுப்பதுமட்டும் தாளிட்ட ஒரு தனியறையில்தான். பல சத்திரங்களைக் கட்டுவித்தான். அன்னதானம் நிறையச் செய்தான். வாசுதேவன் வருவானா என்று பலப்பல இடங்களிலும் சென்று சென்று பார்ப்பான். ஒருநாள் மேல்மாடியில் வனஜாட்சன் தன் மனைவியுடன் இருந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தான். அதே சமயம் கீழே ஒருவன் "அம்மா பிச்சை" என்ற சப்தம் கேட்டது. அக்குரல் வாசுதேவன் குரல் என்று வனஜாட்சன் உணர்ந்தான். உடனே அவனை தனியிடத்தில் கொண்டுபோய் நல்லுணவும் நல்லுடையும் தருமாறு செய்து, அங்கு தான் மட்டும் சென்றான். வாசுதேவன் அரசனைக் கண்டவுடன் எழுந்து கைகுவித்து நின்றான். வனஜாட்சன், "ஆரையா நீர்?" என்று கேட்டான். "அரசே! என் பெயர் வாசுதேவன். என் மனைவி வனஜாட்சியுடன் கானக வழியாக வரும்போது அவள் களைத்து விழுந்து விட்டாள்; நீர் கொணரப் போயினேன். பிறகு வந்து கண்டபோது அவளைக் காணப்படவில்லை. காட்டிலும் நாட்டிலும் என் அருமைக் கண்மணியைத் தேடித்தேடி அலைகின்றேன்" என்றான். அதைக்கேட்டு வனஜாட்சன் கண்ணில் நீர் பெருகிற்று. உடனே ஒரு அரையில் போய் ஆண்வேடத்தை மாற்றிப் பெண்ணுருவுடன் வந்தாள். வாசுதேவன் "கண்ணே" என்று கட்டித் தழுவினான். நெடுநேரம் பேசாதிருந்து ஒரு பெருமூச்சு விட்டான். வனஜாட்சி தன் கணவனை யணைத்து, தனக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் தான் செய்த தந்திரங்களையுங் கூறினாள். வாசுதேவன் அவள் மதிநுட்பத்தை எண்ணி எண்ணி இறும்பூதுற்றான். பிறகு வனஜாட்சி தனது அரச உடுப்பை வாசுதேவனை அணிவித்து அவனை யரியணைமீது ஏற்றினாள். கலாவதிக்கு உள்ளதைக் கூறி கணவனுடன் மதனும் ரதியும்போல் இன்புறச் செய்தாள். வாசுதேவனை கணவனாகப் பெற்றதற்கு கலாவதியும் மகிழ்ந்தாள். வனஜாட்சி தன் தாய் தந்தையரையும் வரவழைத்து தன் கற்பினால் தனக்கெய்திய பெருமிதத்தைக் கூறி மகிழ்வித்தாள். வாசுதேவன் முருகக் கடவுள் போலவும் வனஜாட்சியும் கலாவதியும் தேவயானை வள்ளியைப் போலவும் அன்புற்று இன்புற்றனர். வனஜாட்சியும் கலாவதியும் உடம்பிரண்டு உயிர் ஒன்றாக ஒன்றிவாழ்ந்தனர். அவர்கள் பன்னெடுங் காலம் இராஜ செல்வத்தை நுகர்ந்து இனிது இருந்தார்கள்.

உ

ஓம் குஹாய நம:

# அமிர்த வாழ்த்துப்பா

கருணைத் திருப்புகட் புலனைத் திருப்புகட் கட்டுழலுங்
1கருணைத் திருப்புகட் கவரிமன் பாசமுங் கடிதிருப்புங்
2கருணைத் திருப்புகட் டரன்செவிஇ யூட்டிடுங் கந்தர்புகழ்க்
கருணைத் திருப்புகட் டுலகமெங்குங் கண்ட காட்சியதே.

1, கருணை - கருக்குழியை
2, கருணை - அருணாசலத்து இருக்கப்பட்ட

கனகனைச் செற்றவக் கார்முகிலு வரியைக் கடைந்தழித்தார்
1கனகனைச் செற்றவக் கதிர்முடிக்குகப் புகட்கடல் 2கடைந்து
2கனகனைச் செற்றவக் கசடரும் வழிபடக் கடம்புகுத், 3இ
3கனகனைச் செற்றவக் கிருபை யானந்த செல்க்கணவமுதே.

1. கனகனை - கனகங்களை
2. உக நகம், நகம். உக - மரங்கழிலும் செலுத்தி
3. இகம். அகம் - இகவாடைகளை வெறுத்து

உம்பர் மாந்துமுண வன வேற்புகழ்
இம்பர் யாவ ரெவர்களு முண்ணவே
தம்பிரா னருளுக் கிருபை யானந்த
நம்பி தந்தனர் நாட்களும் வாழ்கவே.

M. சோமசுந்தரம்,
மஞ்சநாயக்கன்பட்டி,
பழனி தாலூகா.



## மலச்சிக்கல் நீங்க

### நிலாவாரைச் சூரணம்.

மலபந்தமே பல நோய்கட்கும் தாயகம். அதனை ஒழுங்கு படுத்துவதற்கு வழி.

| | | |
|---|---|---|
| நிலாவரை | பலம் | 4 |
| ஏலம் | ,, | 1 |
| கடுக்காய் | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| திப்பிலி | ,, | 1 |
| மிளகு | ,, | 1 |
| நெல்லிப்பருப்பு | ,, | 1 |

இவைகளை இடித்துப் பொடித்து, திரிகடிகையளவு வெந்நீரில் போட்டு உண்க. 3. 4. தடவை பேதியாகும். வாய்வு கலையும். வாதபித்த நீர்கள் சமரசப் படும்.

குழந்தைகள் மூவகைப்படுவர்:—

(1) பால்மட்டும் உண்ணுங் குழந்தை

(2) பாலும் அன்னமும் உண்ணும் குழந்தை

(3) அன்னமட்டும் உண்ணும் குழந்தை

குழந்தைகட்கு அஜீரண நோய் உண்டாகும். அதனை மந்தம், மாந்தம், பால்கட்டு, புளிப்பு என்று பல பெயரால் கூறுவர்.

கணைமாந்தம் இவைகட்கு ஏற்ற மிகஎளிதான மருந்து.

½ படி அரிசிச்சாதத்தைக் கஞ்சிபோக்காது 15 நாள் வரை வெயிலில்வைத்துப் புளிக்கச்செய்து சட்டியிலிட்டுக் கருக்கி சாம்பலாக்கி பஸ்பமாக்கி வைத்துக்கொள்க.

இதனை அரையணு எடைவீதம் தண்ணீரில் கொதிக்க வைத்துக் கொடுக்கக் கணை மாந்தம் நீங்கும் பஸ்பம் சிறிது சிவந்திருக்கும்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதருஸ்.

---

# "திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்.

| | | |
|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன், .... | ரூ. 1-8-0 |
| | தனிப்பிரதி .... | ரூ. 0-2-6 |

1. சந்தாரராகச் சேருகின்றவர்கள், ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே மணியார்டர் அநுப்பவேண்டும மணியார்டர் கூப னில் தங்கள் முழு விலாசத்தையும் தெளிவாக எழுதியநுப்ப வேண்டும்.

2. நமது பத்திரிகை. ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால், நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதார ராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அநுப்பப் படும். ஒரு ஆண்டுக் குறைந்த சந்தா கிடையாது.

3. இதழ் கிடைக்கப்பெருத சந்தா நேயர்கள். அத் தமிழ்த் திங்கள் 10உ க்குள் எழுதி பெறவேண்டும். அதற்குமேல் எழுது வோர் பணஞ் செலுத்திப் பெறவேண்டும். இதழ் கிடைக்கப் பெருதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந தெரிவிக்க வேண்டும்.

4. விலாசமாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உ காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கு தெரிவிக்கவேண்டும். இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத் இதழ் அநுப்பபபடும். அதற்கு யாம பொறுப்பாளியல்ல.

மானேஜர்,

**திருப்புகழமிர்தம் காரியாலயம்,**


காங்கேயநல்லூர் *P. O.* (*Via*) காட்பாடி. *N. A.*

---

புத்தக வரவு:

இந்தியத்தாய் தீபாவளிமலர் வரப்பெற்றோம். புத்தகம் வெகு அழகாக அமைந்துளது. நல்ல கருத்துகளும் அமைந்து சிரிய முறையில் வெளிவந்துளது. ஆசியர்: R. ஆனந்தராவ் மதுரை.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்க
கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச்
செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை
வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால்
போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில்
தலை சிறந்தது.

எமது

**"செமந்தகா வைரங்களே"**

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல்
வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 0—8—0. 1-க்கு 0—6—0.

கிடைக்குமிடம்:---

**மோதிரங்கய்ய செட்டியார் சன்ஸ்**

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi, N. A.